செய்தி வெளியீடு எண் : 2061 நாள் : 13.10.2023

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 12.10.2023 அன்று முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னையில் நடைபெற உள்ள ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் – 2023 போட்டிக்காக முதற்கட்டமாக ரூ.15 கோடி உரிமைத்தொகை மற்றும் செயல்பாட்டுத் தொகையினை வழங்கி, மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.7.20 இலட்சம் மதிப்பில் செயற்கை கால்களுக்கான உபகரணங்களை வழங்கினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் டிசம்பர் 9 மற்றும் 10 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் – 2023 போட்டியினை நடத்திட முதற்கட்டமாக ரூபாய் 15 கோடி உரிமைத்தொகை மற்றும் செயல்பாட்டுத் தொகையினை 12.10.2023 அன்று சென்னை, முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விளையாட்டு அமைப்பாளர்களிடம் வழங்கினார்.

இந்திய மோட்டர் ஸ்போர்ட்ஸ் வரலாற்றில் சிறப்பு நிகழ்வாக, பெருநகர சென்னை மாநகராட்சி (GCC), சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் (CMDA), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT), ரேஸிங் புரோமோஷன்ஸ் பிரவைட் லிமிடெட் ஆகியவற்றின் சார்பில் இந்தியாவின் மோட்டார் ஸ்போர்ட்ஸ் தலைநகரான சென்னையில் "சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்" நடத்தப்படவுள்ளது. இந்தப் போட்டிக்கான அறிமுகக் கூட்டம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 16.08.2023 அன்று நடத்தப்பட்டது. இந்தியாவில் முதல் முறையாக சாலைகள் வழியாக நடத்தப்படுகின்ற மிகப்பெரிய மோட்டார் ரேஸ் இதுவாகும்.

சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் – F4 போட்டியானது, இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேஸிங் லீக் ஆகியவை சென்னை மாநகரில் தீவுத்திடல் மைதானத்திலிருந்து 3.5 கி.மீ சுற்றளவில் இரவுப் போட்டியாக (Street Circuit) நடத்தப்படுகிறது. இந்தச் சிறப்புமிக்க போட்டியில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஆண்கள் மற்றும் பெண்கள் ஓட்டுநர்கள் பங்கேற்க உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு சார்பில் இந்தப் போட்டியினை தமிழ்நாட்டில் நடத்துவதற்காக ரூபாய் 40.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ரூ.15 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களான திரு.கே.ராஜேஷ் மற்றும் திரு.கே.கலைச்செல்வன் ஆகிய இருவருக்கும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் தலா ரூ.7.20 இலட்சம் மதிப்பில் செயற்கை கால்களுக்கான உபகரணங்களை வழங்கினார்.

இதன் தொடர்ச்சியாக, துருக்கி நாட்டின் இஸ்தான்புல்லில் 18.05.2023 முதல் 21.05.2023 வரை நடைபெற்ற 2023–ஆம் ஆண்டிற்கான WAKO உலகக் கோப்பை கிக்பாக்ஸிங் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த எஸ். பரத் விஷ்ணு (பழைய கேடட்ஸ் – 32 கிலோ பிரிவு) மற்றும் ஐந்தாம் இடம் பெற்ற எம்.கோகுலகிருஷ்ணன் மற்றும் எஸ். அஷ்வின் (இளைய கேடட்ஸ் 47 கிலோ பிரிவு) ஆகியோர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப அவர்கள், கிக்பாக்சிங் சங்க நிர்வாகிகள் மற்றும் பார்முலா ரேசிங் சர்க்யூட் விளையாட்டு அமைப்பாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in